# குழந்தை உள்ளம்

அந்தக்கடிதம்கூடத்தான் ஒரு குழந்தைப்போலவே ஆட்கொள்ள அவர்களிடம் வந்தது! கடிதத்தை மீண்டும் மீண்டும் கவனித்துப் படித்துவிட்டு லலிதா, ஸ்னானம் முடித்துக்கொண்டுவரும் தன் கணவனிடம் அதை நீட்டினாள். "அப்பா எழுதியிருக்க்கிறார். வேலையை விட்டுடறாராம்; இங்கே அடுத்தவாரம் வராளாம்!" என்று சொன்னாள்.

"என்ன உளர்றே? சரியாய்ச் சொல்லு!" என்றான் விசுவம் பதற்றத்துடன்.

"சரி, நீங்களே படிச்சுக்கோங்கோ! என் அப்பா, அம்மாதான் வராளாக்கும்னு பயந்துட்டேள் போல் இருக்கு!" என்று ரோசத்துடன் விடை பகர்ந்தாள் லலிதா. உளறுவதாக மனைவியை அதட்டி, விசுவம் பேசினது, நான் குழந்தை உள்ளம்

கவனித்தவரையில் இதுதான் முதல் முறை. எனக்கே சற்றுத் திகைப்புத்தான்.

"ஓ! நம்ப அப்பா அம்மாவா?" விசுவம் கடிதத்தை அவளிடமிருந்து வாங்கப்போனான். ஆனால், "கை ஈரம்; தலையிலும் ஈரம் சொட்டறது. படிச்சுக் காட்டு.; தலைவாரிக்கொண்டே கேட்கிறேன்" என்று கூறிவிட்டான், கடிதம் வாங்காமலே.

"அதெல்லாம், நான் படித்தால், வரவேண்டிய தொனி வராது. நீங்கள் கதை வாசிச்சுக் காட்டினால், அந்தக் கதையை நானே ஒரு தடவை படித்தால்தான் எனக்கு விளங்கும்; தெரியுமோன்னோ? எனக்குத் தோணுகிற மாதிரிதானே தோணும் உங்களுக்கும்?" என்று விறைப்புடன் விடையளித்துவிட்டுக் கடிதத்தை மேஜையின் மேலே வைத்து அப்பால் போய்விட்டாள் லலிதா.

கணவன் கதைப் படிக்க, அதை வெகு சுவாரஸ்யமாகக் கவனித்து அநுபவிப்பவள்போலத் தோற்றமளிக்கும் லலிதா, ஏன் இப்போது கேலி செய்கிறாள்? அவளுடைய விறைப்பும், வார்த்தையும் புதுமையாகப் பட்டன எனக்கு. உளறினதாக அவன் கூறிய அந்த சொல், இத்தனை ரோசம் மூட்டிவிட்டதா?

என் மனசுக்குத்தான் எத்தனை குறுகுறுப்பு, இந்தச் சிறு விஷயத்தை ஆராய்ந்து இடை போட! ஒருவாறு விஷயம் விளங்கியது. தன்னுடைய பெற்றோர்தாம் வந்துவிடுகிறார்களோ எனப் பயந்து பதற்றமடைந்தான் கணவன் என்று தெரிந்துகொண்டுவிட்டாள் லலிதா. அந்தப் பதற்றத்திலே தன்னைத் தாக்கிவிட்டான் என்று ரோசம், பாவம்! அவளைப் பொறுத்தவரையில் இது நியாயமற்றதல்லவே?

தலை வாரிக்கொண்டபின் விசுவநாதன் மேஜை யருகில் வந்தான். இரண்டு மூன்று முறை படித்தபின் வைத்தான், கடிதத்தை. நான் அவனை விசாரித்துக் கொண்டே அணுகினேன்.

"உட்காருங்கோ, மாமா. ஆமாம், அப்பாதான் எழுதியிருக்கிறார்" என்று கடிதத்தைக் கொடுத்தான்.

கொடுத்த கடிதத்தைப் படித்தேன். மீண்டும் இரு முறைப் படித்தேன். அதிலே கண்டிருந்த ஒரு பகுதி தான், பன்முறை படிக்க அனைவரையும் தூண்டியிருக்கிறது.

"செயலும் வேலையும் இழந்து, மீண்டும் குழந்தைகள் ஆகிறோம், அம்மாவும் நானும். அங்கே வரவேண்டியதுதானே? எத்தனை நாள் இன்னும் நான் இந்தப் பதவி வகிப்பது? 'ரிடையர்' ஆன பின்னும் வேலை செய்யத் தொடங்கி, ஐந்து வருஷகாலம் ஆகிறது. மற்றவர்களும் எண்ணுவது உண்மைதானே? இனி அங்கே உங்களுடன் வந்திருக்க நாள் நெருங்கிவிட்டது."

இந்தப் பகுதிதான் அந்தக் கடிதத்தின் பெரும் பகுதி. நிஜமாகவே பெரிய பகுதிதான்; பாலிலே வெண்ணெய் போன்ற பகுதி; கடைந்தெடுத்த சீரிய பகுதி.

விசுவநாதனின் தந்தை அருணாசலம் எழுதிய சில கடிதங்களை நான் பார்த்திருக்கிறேன். அந்தக் கடிதங்கள் எல்லாம் உணர்ச்சியைக் காட்டாத வெறும் எழுத்துக் கோலங்களாகவே இருந்தன. சுருக்கமாக நாலே வரி கொண்ட செய்திகள் ஓரிரண்டும் குசலப்ரச்னமும் இருக்கும். தன் தந்தை, உணர்ச்சிகளுக்கு இடம் கொடாதவர் என்று விசுவம் விளக்கியது உண்டு. எனினும், அருணாசலம் எழுதும் கடிதங்களைக் கடிதங்களாகவே நான் மதித்தது இல்லை. ஊரிலிருக்கும் என் குடும்பத்திற்கு நான் பற்பல விஷயங்களை பற்பல உணர்ச்சிகளுடன் விளக்கிக் கொட்டி எழுதுவது வழக்கம். கடிதம் வரைவது ஒரு கலை; நீண்ட கடிதங்களால் உவகையும் ஊக்கமும் ஊற்றெடுத்துப் பெருகும் என்பது என் எண்ணம். அருணாசலம் எழுதுவன கடிதங்கள் அல்ல என்று முடிவு கட்டிவிட்ட நான், இன்றுதான் அவர் எழுதுவதிலும் உணர்ச்சி, உயிர் தோன்றுகிறது என்று எண்ணிக்கொண்டேன்.

கடிதத்தைச் சுவைத்துவிட்டு, விசுவத்தினிடம் கொடுத்த பின்பு, "அடுத்த வாரம் வராப்போல் இருக்கு! என் அறையைக் காலி பண்ணிவிடட்டுமா, விசுவம்?" என்று வினவினேன். காலிசெய்யவேண்டியிருக்குமோ என்னும் ஐயம்தான் எனக்கு.

ஆனல் விசுவம் அன்புடன் என் பேச்சுக்கு மறுப்புக் கூறினான். அவனுக்கு இதுவரையில் பேச்சுத் துணையாக இருந்த நான், இனிமேல் அவன் தந்தைக்கு பேச்சுத் துணைவனாக இருக்கவேண்டுமாம். நான் எங்கும் போய்விடலாகாது என்று அன்புக் கட்டளை இட்டான்.

அதைக் கேட்டவுடன் இருப்பிடம் தேடும் கவலை ஒழிந்து, உவகை உண்டாயிற்று; முப்பது வயசு இளைஞனாகிய விசுவநாதனுக்கும் அறுபது வயதுக் கிழவராகிய அருணாசலத்துக்கும் பேச்சுத் துணையாக இருக்க வல்லமை கொண்ட என் ஐம்பது வயசுப் பருவத்தை எண்ணிப் பெருமை, பெருமிதம் எல்லாம் உண்டாயின எனக்கு. நான் உற்சாகத்துடன், மேய்ச்சல் முடிந்து இருப்பிடம் வரும் பசுவைப்போல, என் அறைக்கு மீண்டேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம், சூழ்நிலையிலே ஒரு திடீர் மாறுதலை உணர்ந்தேன். விசுவம், சாய்வு நாற்காலியோடு இணைந்து கிடந்தான். லலிதா சமையற்கட்டிலேயே சுற்றிச் சுற்றி அலைந்தாள். வீட்டின் முன்புறம் வந்தாலும், வந்த காரியத்தைப் பார்த்துக்கொண்டு, சுண்டிவிடப்பட்ட கோலிமாதிரி, சமையறையில் போய் நுழைந்தாள். விசுவத்தை வளைய வரவில்லை. இது அவள் போக்குக்குப் புதுமை; எனக்கும் காணாத காட்சி.

அவளுடைய பெண் கீதா வெளியே விளையாடிவிட்டு வந்தபிறகு தாயினிடமும், தந்தையினிடமும், என்னிடமும், மாறி மாறி வந்து மழலை மொழிந்து, சூழ்நிலைக்குச் சுரம் கூட்டினாள். ஆனால் இசை தொடர்வே இல்லை. சூழ்நிலையிலே தொட்டிலில் துயன்ற அவர்களுடைய இள மகவு, தெய்வத்திற்கு நிகரான அந்தப் பச்சிளங்குழந்தை, பள்ளிகொண்ட பெருமானைப்போலவே, எல்லாம் அறிந்த மோன நிலையிலே கண் வளர்ந்திருந்தது.

பெரியவர்களிடம் தன் பேச்சு எடுபடாத குறைபோலும், கீதா தொட்டிலண்டை வந்தாள். அவள் செய்த குறும்பு ஏதோ? குழந்தை விழித்தது; அழுதது. தொட்டிலை ஆட்ட எழுந்து வந்தான் விசுவம். லலிதாவும் அங்கே வந்தாள்.

"ஆட்டவேண்டாம். அதுக்குப் பசி; தூங்காது!" என்று கூறிவிட்டுப் பரபரவென்று லலிதா குழந்தையை எடுத்தாள். இந்தச் சமயம் கீதா ஏதோ வினவ, தனக்குத் தெரியாததுபோலப் பாவனை செய்து, விசுவம் மனைவிடம் கேட்க, அவள் விடை பகர, சிறிது நேரத்திற்குள் கணவன் மனைவி இருவர் போக்கிலும் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அவர்கள் முகத்திலே ஒளி, குரலிலே ஒலி, வீட்டிலே கலகலப்பு ஏற்பட்டன. என் மனத்திலே அமைதி நிலவியது.

ஆம், நான் கொஞ்ச நேரமாக மனம் கலங்கியிருந்தேன். ஒற்றுமையே உருவாக இருந்த சதிபதிகள், இனிமையே உருவாக இருந்த லலிதாவும் அன்பே உருவெடுத்த கணவன் விசுவமும், இன்று ஒரு மணி நேரமாக காட்சியளித்த புதுமைக் கண்டு நான் அயர்ந்தேன்.

என் அபிமானத்தையும் கவனத்தையும் நான் இங்கே குடி வந்த நாளாய்க் கவர்ந்திருந்த தம்பதிகள் அவர்கள். அறிவும் விவேகமும் உள்ளவர்கள். பண்பட்ட குடும்பத்தில் பழகியவர்களுக்கே உரிய நடையுடை பாவனை படைத்தவர்கள். விசுவமும் லலிதாவுங்கூடப் பெற்றோரின் அரவணைப்பிலே வளர்ந்தவர்கள். அந்தப் பெண் லலிதா, தன் கணவன் பெற்றோருடனும் சில வருஷம் இருந்து பழகியவள். இவர்கள் ஆதரிச தம்பதிகளாகத் திகழ்வதற்கு இந்த அம்சங்கள் போதாவோ?

என் மக்களின் அருகில் இருந்து, தந்தை ஸ்தானத்திலே அவர்களுக்கு ஏதும் அறிவுறுத்த இயலாத நிலைமையில் இருந்தவன் நான். என் உத்தியோகம் அப்படி. என் மனைவியின் உடல் நிலையும் அப்படி, ஆனால் மக்களுக்குத் தனித்தனியே கடிதங்கள் எழுதவும், அவர்களுக்கு ஏற்ற அறிவுரைகள் வரையவும் எனக்குத் தளராமனம் தருபவர்கள், இந்த ஆனந்த தம்பதிகள்தாம்.

அப்படி யிருக்க, இன்று இவ்விருவரும் தெளிவற்ற ஒரு காரணத்தால் ஒரு தினுசாக இருந்ததால் நான் எத்தனை குழம்பிவிட்டேன் என்பது அந்தக் கடவுளுக்குத் தான் தெரியும்! அல்ல, குழந்தைகளுக்கும் தெரிந்திருக்கிறது!

குழந்தைகளாலே வேற்றுமை உணர்வு நீங்கிய சதிபதிகள், அதற்கப்புறம் தங்களுக்கு இயல்பான குதூகலப் பேச்சிலும் குழந்தைகளுடன் விளையாடுவதிலும் ஈடுபட்டனர், முன்போலவே.

கைக்குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு, கணவனுக்குச் சற்றுத் தள்ளினாற்போல உட்கார்ந்து, அவனுடன் உரையாடினாள் லலிதா. அவனும் குஷியிலே ஒரு தடவை, "கதைப் படிக்கட்டுமா?" என்று புத்தகத்தைப் புரட்டிவிட்டு, உடனே, "அடாடா, அதுதான் நீ கேலி பண்ணினையே, நான் படித்தால் புரியலை என்று!" என்று நாக்கைக் கடித்துக்கொண்டு ரசித்தான்.

"பரவாயில்லை, படியுங்கோ, கேட்கிறேன்" என்று கூறிவிட்டு, லலிதா கணவனருகில் வந்து அமர்ந்துகொண்டாள். விசுவமும் உடனே இசைந்துவிட்டான்.

குழந்தை கீதா, "அம்மா, பின்னிவிடேன், பின்னிவிடேன்" என்று அன்னையின் கால்களைச் சுற்றி வந்து வந்து, சீப்பை நீட்டி, முன் தலைமயிரைப் பிய்ந்து விட்டுக்கொண்டு, நச்சின பொழுது, கைக் காரியம் விட முடியாமல், குழந்தையின் வேண்டுகோளை ஏற்க மறுத்தாள் லலிதா. ஆனால் கீதா, "பல்லிக்கூடம் நானும் போகணுமே! நாழியாச்சே!" என்று அழத்தொடங்கியதும் 'களுக்' கெனச் சிரித்துவிட்டாள் அவள். பெருமிதப் புன்னகைக்கு ஏளனப் பூச்சுப் பூசிக்கொண்டு கணவனண்டை வந்தாள். "பார்த்தேளோன்னோ, பெரிய மனுஷியை!" என்று சொல்லிப் பெருமை அடித்துக்கொண்டு, அவனுக்கும் பங்கிட்டாள்.

"பின்னேன்!" எனச் சொன்னான் அவன்.

"இல்லாவிட்டால் விடவா போறா? பின்னறேன். இப்பவே பின்னாவிட்டாலும் கஷ்டம். சாயங்காலம் வரையில் குட்டி பத்ரகாளி மாதிரி சுற்றுவளே!" என்று கூறிக் குழந்தைக்குத் தலை பின்ன, அங்கேயே கணவனுக்கு எதிரில் உட்கார்ந்தாள். அன்னையும் தந்தையும் சிறு சிறு விஷயங்களைப் பற்றிப் பேசிப் பெரு மகிழ்ச்சி அடைந்துகொண்டிருந்ததுபோலவே, கீதாவும் தன் அன்னை தனக்குத் தலை பின்னுவதையே பெரும் பாக்கியமாகக் கருதியவாறு, சீப்பின் ஸ்பரிசத்தையும், பட்டு ரிப்பனின் நினைப்பையும் சுவைத்துச் சுகப்பட்டவாறு, சமர்த்தாக உட்கார்ந்திருந்தாள்.

இத்தகைய ஆனந்தக் காட்சிகள் பல இயங்கிக் கொண்டிருந்தாலும், சிற்சில சமயங்களிலே அவற்றில் ஒரு நிழல் தோன்றும்.

ஒரு தடவை ஏதோ பேச்சுப்போக்கிலே லலிதா செல்வதைச் செவியுற்றேன். "உம், இருக்கட்டுமே! என்றைக்கோ ஒரு நாள் மனசு சிரமப்பட்டு, ஒரு தினுசாக நான் இருந்துவிடட்டால், அதற்கு, 'குட்டிப் பத்திரகாளியின் அம்மா!', 'பெரிய பத்திரகாளி!', 'பரதேவதே!' என்கிறேள்! போறது, இனிமேல் நான் வாயைத் திறந்தால்தானே? இன்னும் நாலு நாளைக்குத்தானே எனக்கு இந்த உரிமையும் சுதந்திரமும்?"

விசுவம் ஒன்றும் பேசவில்லை. லலிதா அப்பால் நகன்றாள். அரைமணி நேரம் சூழ்நிலையில் சுரத்து இல்லை. அப்பொழுது, கீதா எங்கேயோ விழுந்து, முழங்காலில் சிராய்த்துக்கொண்டு ஓடிவந்து அழுதாள். அது கண்டு, லலிதா குழந்தையை எடுத்து அணைக்க, விசுவம் ஒரு வெள்ளைத் துணியைக் கிழித்துக்கொண்டு, மருந்து இருக்கும் இடத்தை லலிதா கூற, கணவன் மனைவியிடையே வேற்றுமை நிழல் மறைந்து, ஒளி புகுந்தது.

ஆனால் என் உள்ளத்திலே கிரகணம் புகுந்து, பற்றிக்கொண்டது. என் எண்ணங்களுக்குக் காயம் பட்டது. எனது நேசமனம் இசிவு கொண்டது. இதுவரை இந்தத் தம்பதிளையும் இவர்களது இன்பக் குடித்தனத்தையும் என் மனம் ஆராய்ந்த விதம் வேறு. இவ்விருவர்பால் உள்ள என் மன உணர்ச்சிகளுக்கு, அன்பும் பரிவுமே ஊட்டி, நண்பனைப்போல இருந்துவந்த என் மனம், இப்பொழுது, குற்றங்குறை எடுத்துக்கூறி, எச்சரிகை செய்யும் வைத்தியனைப்போல மாறிவிட்டது.

மறுநாள் குழந்தை கீதா, தலை பின்னிவிட, அன்னையை நச்சி, இணங்கவைத்து, அப்பாவிடம் இழுத்துவந்து அங்கேயே சீப்பு, கண்ணாடி, ரிப்பன் சகிதம் உட்காரவைத்தாள்.

"அப்பாடி, என்ன அமர்க்களம், பின்னு, பின்னுன்னு!" என்று சொல்லிக்கொண்டே குழந்தைக்குத் தலை பின்னத் துவங்கினாள் லலிதா.

"உம், சொல்லமாட்டாளா, பின்னே? எங்கம்மா கூடத் தனக்குத் தலை வாரிவிடச் சொல்வாள் பார்! ஏன்னா, அம்மாவும் குழந்தையாய் விடறாளே" என்று கூறிச் சிரித்த விசுவம், கீதாவை நோக்கி, "ஏன் கீது, பாட்டி தாத்தா உன்னோடு விளையாட வருகிறார்களே; தெரியுமா?" என வினவினான்.

"உம். தாத்தா வராளா? காதுலே வெள்ளை மயிர் இருக்குமே, அந்தத் தாத்தாவா, அப்பா?" என்று கூவினாள் குழந்தை.

கணவன், குழந்தையின் பேச்சை ரசித்துச் சிரித்தது, அசட்டுத்தனமாகப் பட்டதோ, அல்லது பின்னலை அசக்கிவிட்டாள் என்ற கோபமோ, "இருடி, அசக்காமல்!" என்று சொல்லிக் குழந்தையின் தலையிலே ஒரு குட்டு வைத்தாள் லலிதா.

"உம், குட்டாதே! குட்டினால் மூளைக்கு மகா கெடுதி, தெரியுமோ?" என்று மனைவியைக் கண்டித்த விசுவநாதன், பிறகு சற்று நிதானமாக, "இனிமேல், என்ன லலிதா, நமக்கு நாலு குழந்தைகள்! எனக்கு ஒரு பெண், ஒரு பிள்ளை - கீதா, அப்பா! உனக்கும் ஒரு பெண் ஒரு பிள்ளை - அம்மா, அருண்! எப்படி?" என்று சொல்லி முறுவலித்தான்.

"போருமே, அசட்டுப் பிசட்டுன்னு! பைத்தியந்தான் பிடிச்சுடும்போல் இருக்கு. குழந்தைகளாகிவிடறோம்னு அப்பா எழுதினதைப் பிடிச்சுண்டேள்போல் இருக்கு! எப்படி ஆகிவிடுவாளோ? சிரிக்கத்தான் வேணும்!" என்று கூறி, அவனுடைய முறுவலை முறித்தாள் லலிதா.

"ஏன், சொல்றதில்லையோ, குழவிப்பிராயமும் கிழப்பிராயமும் ஒன்றுதான் எண்று?"

"ஆமாம், ஆமாம், நிஜம்தான். என்னமோ என் மூளை கலங்கிப் போச்சு; இந்த விஷயமெல்லாம் தெரியவில்லை!"

\

இப்படி ஒப்புக்கொண்டபொழுது லலிதாவின் நாக்குச் சுழன்ற வேகமும், விரல்கள் குழந்தையின் பின்னலை முடித்த வேகமும், மறுகணம் அவள் எழுந்துபோன வேகமும், என் மனத்திலே ஊசலாடிய எண்ணங்களைச் சுழல அடித்துப் பின்னல் போட்டுவிட்டன.

கணவனுடைய பெற்றோரின் வருகையை ஒட்டி, லலிதாவின் உள்ளத்திலே உவகை இல்லை.

பெரியவர்களிடமிருந்து உறுதிக்கடிதம் - இறுதி அறிவிப்பு - வராததால் வீட்டிலே அவர்கள் வருகைக் குறித்துப் பரபரப்புக் காணோம் என்று மூன்று நாட்களாக எண்ணியிருந்த நான், இப்போது உண்மையை ஊகித்தேன். தாத்தா பாட்டி வருகைபற்றிக் குழந்தைக்கு இவர்கள் அறிவித்த தாமதத்தைக் கண்டு, நெற்றி சிறுத்தேன். அவர்கள் வந்து இறங்கும் நாள் விடிந்துங்கூட உவகைக்குறி குவிந்தே இருந்தது கண்டு, சற்றுத் துணுக்குற்றேன்.

"என்ன இருந்தாலும் வேற்றுமை உணர்ச்சி இருக்கிறது, இந்தப் பெண்ணுக்கு!" என்று எனக்கு லலிதாவிடம் அதிருப்தி ஏற்பட்டது. விசுவம் யாது செய்வான்? அவனுடைய நிதானமும் பரபரப்பின்மையும் காண, அநுதாபங்கொண்டேன் அவன்பால்.

அன்று, முதிய தம்பதிகள் வந்து சேர்ந்தனர். அவர்கள் இல்லம் வந்து சேர்ந்த அரைமணி கழித்தே நான் இருப்பிடம் வந்தேன்.

வந்தனங்கூறியவாறே பெரியவரை அணுகினேன். அவர் மனைவி, உள்ளே ஸ்நான பானம், ஜபதபம் செய்வதிலே ஈடுபட்டிருந்தாள்; விசுவநாதன் தந்தையருகில் இருந்தான். என்னை அவருக்கு அறிமுகப்படுத்தினான். அவரும் மகிழ்ச்சியை தெரிவித்தார்.

என்னை அவர் கேட்ட முதல் கேள்வி, "இன்னும் ஐந்தாறு வருஷம் இருக்குமா நீங்கள் ரிடைர் ஆக?" என்பதுதான்!

"உம், ஏழு வருஷங்கள் இருக்கின்றன" என்று தெரிவித்தேன்.

"இன்னும் ஏழு வருஷம் போனால், அப்புறம் நீங்களும் ஒரு குழந்தைதான்" என்றார் அருணாசலம்.

அவருடைய பேச்சு, விநோதமாய்ப் பட்டதால் நான் சிரித்துக்கொண்டே, "ஒரு குழந்தைக்கு ஏழு வயசு ஆனதுமே அது குழந்தையிலே சேர்த்தியில்லையே, ஸார்!" என்றேன்.

அவரும் என்னுடன் சிரித்து அநுபவிப்பார் என்று எதிர்ப்பார்த்தேன், ஆனால் அவர் சிரிக்காமலேயே, "அப்படியில்லைன்னா! அந்தண்டை நம்ம அந்நிய காலத்திலிருந்து பின்னோக்கி வரும்போது, நமக்குக் குழந்தைப் பிராயம்தானே? அதுதானே வேலையை விட்டுட்டு ஒருவருடைய போஷணையிலும் மேற்பார்வையிலும் இருக்கிறோம்? என்று உடனே கூறினார். நான் ஆமோதித்தேன்.

சற்று நேரம் உரையாடிவிட்டு, என் அறையை அடைந்தேன். நான் இப்பால் வந்தபிறகு, அந்த மூதாட்டி காமாக்ஷியம்மாள் கூடத்திற்கு வந்தாள். அங்கிருந்த பெஞ்சுமீது படுத்தாள். அப்புறம், லலிதா, பழத்துண்டுகளைக் கொணர்ந்து வைக்க, அவர்கள் உண்டு இளைப்பாறினார்கள்.

லலிதாவைக் கவனித்தேன். அவள், தன் குழந்தைகளைப் பெரியவர்களிடம் காட்டி, விளையாடவைத்துச் சிரித்துப் பேசினாள். நான் எதிர்ப்பார்த்த சோர்வோ, சிடுசிடுப்போ அவள் முகத்தில் காணவில்லை. மலர்ச்சியே புலப்பட்டது. எனினும் நான் ஐயமுற்றேன். பெரியவர்கள் இருவரும் தங்களுக்கு உரிமையான சந்தோஷத்துடன் சௌகரியமாக வாழ்வார்களா என்று தோன்றியது. களைத்து, இளைப்பாறும் அந்த முதியவர்களிடம் பரிவும் கனிவும் கொண்ட நான், கடவுளை ஒரு தடவை நினைத்துக் கொண்டேன்.

என்னையும் முதியவருக்குப் பிடித்துவிட்டது போலும்! அவர் என்னுடன் உரையாடுவதிலே ஆர்வங்காட்டினார். அவருடைய மனைவி, என்னோடு பேச முன்வந்ததில்லை. என்னைவிட ஒரிராண்டுகள் பெரியவளே ஆனாலும், அந்தக் கால மனுஷி அல்லவா? ஆனால் தம்பதிகள் பேசிக்கொண்டிருக்கும் சமயம் நான் கண்ணிலே பட்டால், கிழவர் என்னை அழைப்பார். என்னைக் கண்டு, பதறிச் சுருட்டிக்கொண்டு போய்விடமாட்டாள் காமாக்ஷியம்மாள். எழுந்து உட்காருவாள். எங்கள் சம்பாஷணையைக் கவனிப்பாள். இடையிடையே ஏதெனும் பேசுவாள்.

இது போன்ற சந்தர்ப்பங்களே, எனக்கு அந்த மூதாட்டியுடன் பேசவும், அவள் பேசுவதைக் கேட்கவும் உதவின. ஒரு விஷயம் எனக்குச் சுவையூட்டியது. முதியவர்தாம் தம்மைக்

குழந்தையென அடிக்கடி சொல்லிக்கொண்டார் என்றால், இந்த அம்மாளும், அவ்வப்போது, "நாங்கள் என்ன, இனிமேல் குழந்தைகள் மாதிரிதானே?" என்பாள்.

"இனிமேல் குழந்தைகள்தாமே நாங்கள்? சமைத்துப் போட்டால் சாப்பிட்டுக்கொண்டிருக்க வேண்டியதுதானே?" என்று தினமும் ஒரு முறையாவது அவர்கள் இருவரில் ஒருவர், கூறத் தவறவில்லை. இது எனக்கு வேடிக்கையாக இருந்தது.

இருவரும் ஓய்வு பெற வேண்டியவர்கள்தாம். அந்த நாளிலே மாபெரும் வேந்தருங்கூட, முதுமை அடைந்ததும், அரசுரிமையும் அத்தாட்சிப் பொறுப்பையும் இளைஞர்களான மக்களிடம் ஒப்பித்துவிட்டு, ஒதுங்கிச் சென்று, வேதாந்த விசாரத்திலும், தெய்வ வழிப்பாட்டிலும் புகுந்து, அறவழி நின்றனர். இந்த நாளில் சிலரே அவ்வழி செல்கின்றனர். பலர், இறுதி மூச்சு வரையில் பொறுப்பையும் அதிகாரத்தையும் கையிலே பற்றிக்கொண்டு, இளவயசினர்க்குப் பொறுப்பை அளிக்க மனம் வராதவராக இருக்கின்றனர். ஆனால் இந்த முதிய தம்பதிகள், பண்டை நாளின் வேந்தர்போலப் பெருங்குணம் படைத்தவராய், பிள்ளை, நாட்டுப்பெண் இருவரிடமும் பொறுப்பு என்னும் அதிகார உரிமையைக் கொடுத்திருக்கிறார்களே!

இதை நினைந்து நான் அந்த முதியோரை என் மனத்துள் பாராட்டினேன். விசுவமும் லலிதாவும் இவர்களை என்றென்றும் அன்புடனும் பணிவுடனும் பேணவேண்டும் என வேண்டிக்கொண்டேன். விசுவமும் லலிதாவும் அன்பும் பணிவும் உள்ளவராகவேஇப்பொழுது விளங்கினர். ஆனால் இந்த நிலை நிலையானதா? பெரியவர்கள் வந்தபின்பு லலிதா கணவனுடன் உலாவ வெளிக் கிளம்பவில்லை; அக்கம் பக்கம் போய் அளவளாவி வருவதில்லை; தன் குழந்தைகளைக்கூட அதிகம் கொஞ்சவுமில்லை, அதட்டவுமில்லை. கூடத்து நாற்காலிலே அமர்ந்து, புத்தகம் படிப்பதில்லை. ஆனால் இந்தப் பணிவுப் போக்கு எத்தனை நாளைக்கு? இவர்கள் வரவைப்பற்றிப் புரைசலான எண்ணம் இருக்கிறது, இவர்கள் வருமுன். வந்தபின் அந்த எண்ணம் இருக்கும் சுவடே காணோம். ஆனால் எத்தனை நாள் பதுங்கும் இந்தப் புரைசல் எண்ணம்?

நான் லலிதாவினிடம் அநுதாபப்படவில்லை. அழகும் இனிமையும் உபயோகமும் உள்ள காயும் பழமும் பூவும் இலையும், வாழையின் வெளியே குலுங்க, அவற்றை எடுத்துப் பயன் படுத்திக்கொண்ட பிறகும் திருப்தியுறாமல், வீழ்ந்திருக்கும் வாழை மரத்தினுள்ளே, பல பகுதிகளுக்கிடையே பதுங்கியிருக்கும் தண்டுக்காகவும் அலைவதுதானே நம் மனம்?

லலிதாவின் மனத்துள்ளே பதுங்கியிருக்கும் அந்த எண்ணம் வெளிக்கிளம்புவதை எதிர்ப்பார்த்தேன்.

ஓர் ஆங்கிலப் படம் ஓடியது உள்ளூரில். "எப்போது வரும்? நான் பள்ளியில் படித்த இலக்கிய நாவல் ஆச்சே அது? கொட்டகை முதலாளி பரிசயமுள்ளவன் என்கிறீர்களே, வரவழைக்கச் சொல்லுங்களேன்" என்று லலிதா நச்சின படம் அது. ஒரு மாதமாய்த்தான் அவள் அப்படி நச்சவில்லை. இந்தச் சமயம் அந்தப் படம் வந்திருந்தது. பின்னே என்ன? இதற்குக் கிளம்பி விடுவாள்! இந்த ஆசையை அறிந்தவனான விசுவமேஅழைத்துச் செல்லக்கூடும் மனைவியை. பிறகு? . . . ஒரு தடவை கிளம்பிய பிறகு, பெரியவர்க்ள் வீட்டில் இருக்க, இவர்கள் இருவருமாகக் கிளம்புவது சகஜமாகிவிடும்! இயற்கைதானே?

இன்ன படம் வந்திருக்கிறது என்று லலிதாவிடம் சொன்னேன். "வந்திருக்கா?" என்றாள்; அவ்வளவுதான். கனவணே அழைத்தேகலாம். அல்லது அவனிடம் சொல்லி ஏற்பாடு பண்ணிகொள்ளலாம் என்ற எண்ணம் போலும்!

"சரிதான்" என்று எண்ணிக்கொண்டேன். சாமர்த்தியசாலிதான்: ஆள் உள்ளே இருக்கிறாள்! இல்லாவிட்டால் . . . படம் வராதபோது என்ன ஆசைப் பட்டாள்! . . . இப்போது . . .

ஒரிரண்டு நாட்கள் ஓடிவிட்டன. நான் எதிர்ப்பார்த்தது நடைபெறவில்லை. "மோழைப் பெண்தானோ!" என்று திடுக்குற்றேன். சினிமா பேச்சே காணோம். படம் அன்றோடு நின்றுவிடப்போகிறது. விசுவத்தைக் கேட்டேன். தம்பதிகளாகவும் போகிறதாக இல்லை. அவன் தனியேகூட போவதில்லையாம்.

அங்கலாய்த்தேன். அதன் பிறகு, ஒரு முடிவு செய்தேன். பிற்பகல் முதியோர் எதிரிலேயே சினிமாப் பேச்சைத் துவக்கினேன். லலிதா ஆசைப்பட்ட படம் என்றும் சொன்னேன், விசுவத்திற்கு நினைப்பூட்டுவதுபோல.

"லலிதாகூட இங்கிலீஷ்ப் படம் போறாளா என்ன?" என்று கேட்டார் அருணாசலம்.

"அங்கே ஊரிலே அடுத்தகத்துக்காரா வருந்தி அழைச்சாலும் போகமாட்டாளே, எந்த சினிமாவுக்கும்!" என்றாள் அம்மாள்.

'எப்பவும் எல்லோரும் ஒரே மாதிரியாக இருக்க முடியுமா? நாற்பது வருஷம் உத்தியோகம் பார்த்த நான் இப்பொ பார், வெறுமனே இருக்கேன். நாற்பது வருஷம் குண்டான் குண்டானாக வடிச்சுச் சமைச்சுப்போட்டுப் படைச்சிருந்த நீ, பிறத்தியார் சமைச்சுப்போடச் சாப்பிட்டுண்டு கிருஷ்ணான்னு கிடக்கிறெ" என்று சொன்னார் அருணாசலம்.

"பின்னே வாழ்நாள் முழுக்க உழைக்கணுமா? நன்னாயிருக்கே! இல்லையா, மாமா?" என்றான் விசுவம் என்னிடம்.

"ஆமாம், ஆமாம்" என்று தலையாட்டினேன் நான்.

இனம் புரியாத ஒரு கலக்கம், என் இருதயத்திலே.

லலிதா, காரியமாக அந்தப் பக்கம் போனாள். அவளைப் பார்த்தேன். கண்ணும் கருத்தும், நெஞ்சும் நோக்கும் உயர்த்தி, வெகு சிரத்தையாக மடித் துணிகளைக் கொடியில் போட்டுக்கொண்டிருந்த அவள்மீது, அவள் நெஞ்சின்மீது, என் கண்கள் பதிந்தன. என் நெஞ்சு வலித்தது!

ஒரு நெகிழ்ச்சி என் உள்ளத்திலே. "விசுவம், நீ படத்தைப் பார்க்கத் தவறக்கூடாது. இரண்டு டிக்கட், அவளுக்கு, உனக்கு, கொண்டு வந்துவிடப்போகிறேன். தயாராய் இரு" என்றேன். மறுகணம் ஆறுதலுடன் புறப்பட்டேன்.

மனைவியுடன் சினிமாச் செல்ல, விசுவம் சம்மதித்துவிட்டான். டிக்கெட்டைத் தந்து, லலிதாவிடம் சொன்னால், அவள் தயங்கினாள். கடைசியில் என் வற்புறுத்தல் வளர, பெரியவர்களின் அநுமதி தெறித்து விழ, அவள் கிளம்பினாள். கிளம்புமுதல் நாலு தடவை பெரியவர்களிடம் சொல்லிக்கொண்டுப்போனாள்.

"இப்போதெல்லாம் லலிதா குஷாலாகத்தான் இருக்கா!" என்றார் அருணாசலம்.

“உம்,  எல்லாம் அப்படித்தானே? முந்தி அகமுடையானோடே தர்க்கம் செய்யமாட்டாள். நாலு நாள் முந்தி, அவன் பருப்புக்குப் பதிலாக வேறே ஏதோ வாங்கிண்டு வந்துட்டான்னு, அவனை என்ன மாட்டு மாட்டுன்னு மாட்டினாள் தெரியுமா?” என்று சொன்னாள் அம்மாள்.

“அதுக்குத்தான் நாம் கண் காணாமல் இருக்கணும்னா!” என்றார் அருணாசலம்.

நான் அருகில் இருப்பதை அவர்களுக்கு அறிவிக்க விரும்பினேன். அன்று லலிதா கணவனை இரண்டொரு கேள்விகள் கேட்ட காரணமும் எனக்கு புலனாகியிருந்ததால், அதையும் உணர்த்த எண்ணினேன்.

“சமையலுக்கு உடனடியாக வேணும்னு அவள் சொல்லியிருந்தாள். அப்படியும் விசுவம் மறந்துவிட்டானேன்னு, அவளுக்குக் கோபம்; சமையல் ஆதங்கம்” என்றேன் நான்.

“அதெல்லாம் பெரியவாள் இருந்தால்தான் நாவடக்கம் வரும்னா!  நாங்கள் இனிமேல் குழந்தைகள் ஆச்சே! பெரியவாள்னு தோணுவானேன்?” என்று சதிபதிகள் இருவரும் என்னிடம் சமாதானம் கூறினார்கள்.

“ஐயோ! இவர்களைபோலத் தம்பதிகள் - லலிதா விசுவம் போன்ற கணவன் மனைவி - இந்த நாளிலே இருந்தால் போதாதா?” என்று மேளங்கொட்டிக் கூவி விடையளிக்க விரும்பியது என் மனம். ஆனால் நான் சொன்னது இதுதான்:

“அப்படியெல்லாம் இருக்கமாட்டா” என்றேன்; அவ்வளவுதான்.

ஆனால் அந்த மறுப்புக்கூடச் சற்றுச் சுரமுள்ளதுதான். ஏனெனில் எங்கள் பேச்சு, வேறு பாதையில் வளைந்தது. இதன் மூலம் ஓர் உண்மையை அறிந்தேன். என் வயசுபோலவே என் மனசுகூட நடு நிலை வகிக்கவேண்டும் என்று உணர்ந்தேன். என்  தோழமையின் கடமையும் அதுவே என அறிந்தேன்.

கொஞ்ச நாட்களாக, முதிய தம்பதிகள் வந்தது முதலாக, நான் அவர்கள் பக்கமே சாய்த்துவிட்டேன் என் உள்ளத்தை. ஆனால் இன்று முதல் என் உள்ளத்திலே ஒரு விழிப்பு; என் மனச்சாட்சிக்கு ஒரு தெளிவு.

** ** **

நாட்கள் கடந்தன, லலிதாவின் மாமியாரும் மாமனாரும் வந்து, இரண்டு மாதங்கள் ஆகின்றன, ஆங்கிலப் படம் பார்த்து வந்து மூன்று வாரம் ஆயின.  ஆனால் அப்புறம் லலிதா கணவனுடன் உலாவப்போவதோ படம் பார்ப்பதோ நடைபெறவில்லை. இல்லமே உலகமாக லலிதா இருந்தாள்.

பெற்றோருக்கு ஊரிலுள்ள புதிய இடங்களையும் கோயில், பூங்கா முதலிய இடங்களையும் காட்டவேண்டுமென்றும், நண்பர்களுக்குப் பழக்கம் செய்விக்கவேண்டுமென்றும், விசுவம் அவர்களை அவ்வப்போது அழைத்துப்போனான். லட்சிய குமாரன்தான் அவன். ஆனால் லட்சியக் கணவன் தானோ?

முதியவர்கள், கீதாவைக் கூப்பிடுவார்கள், புறப்படும்பொழுது. ஒவ்வொரு சமயம் அவள் செல்வாள். பல சமயம் அன்னையை விட்டு வரமாட்டாள். லலிதா என்றோ ஒரு நாள்தான் அவர்களோடுப் போனாள். மற்றொரு நாள் அவள் தன் மாமியாரக் கேட்டாள், கூப்பிட்டாள், பூங்காவுக்கு வருமாறு. "நீ வேணுமானால் அவனோடு போயிட்டு வாயேன். எனக்கு அலுப்பா இருக்கு, நாலு நாளாக வெளியே போய்வந்து" என்று பதில் வந்தது காமாக்ஷியம்மாளிடமிருந்து. அக்கம் பக்கத்தவருடனாவது லலிதா புறப்படுவாள் என்று நினைத்தேன். ஆனால் லலிதா கிளம்பவே இல்லை.

லலிதாவின் புக்கக வாழ்க்கை, கடந்தகால மணவாழ்க்கை, சுருள் பிரிந்து, என்னெதிரே நிழலாடியது. அங்கே, கணவனின் பெற்றோருடைய ஆட்சியின் கீழ்க்குடியாய் இருந்த நாளிலே எத்தகைய புதுமண வாழ்க்கையைக் கண்டிருப்பாள் அவள்! லலிதையின் மனத்திலே இருப்பது பீதிதான்; வெறுப்பு அல்ல.

இந்த நினைப்பிலே நான் பெரியவர்களைப் பாராட்டாவிடினும் பழிக்கவில்லை. அவர்கள் வயசுக்கு இயல்பு அது. ஆனால் லலிதா ஏன் பயப்படவேண்டுமோ?

அது அவள் குடும்பம். அவளுக்குப் பொறுப்பும் தெரிகிறது. ஒழிந்த நேரங்களில் அயல் வீடு, தோழிகள் அகம் போய் வரட்டுமே! அந்தப் பேச்சுகளிலே அங்கே வம்பும் தும்பும்ந்தான் எழும் என்று வெருவுகிறாளாயின், வீட்டிலே சற்று உரிமையுடன் சுற்றட்டுமே!

கைக் குழந்தையை லலிதா மடியில் இட்டுக்கொண்டிருக்க, விசுவத்தின் பக்கத்தில் கீதா அமர்ந்திருக்க, விசுவமும் லலிதாவும் சோழி சுருட்டிக் கட்டம் விளையாடும் காட்சியைக் காணவில்லை. மாமியாரும் மாமனாரும் கணவனும் தன் மக்களைப் புடைசூழ்ந்துகொண்டு, அவர்களுடைய மழலையும் விளையாட்டையும் ரசித்துக்கொண்டிருக்க, கால் கடுக்க நின்றவாறோ, அல்லது அடுக்களையிலே கவனமும் இங்கே காலும் சேர்ந்து, சோர்வுற அலைந்தவாறோ அவர்களுக்கு ஒதுங்கினாற்போலக் காட்சி அளிக்கும் லலிதாதான் என் நினைவை நிறைத்தாள்.

இந்த இளந்தம்பதிகளுடைய அகமும் முகமும் மலரட்டுமென்று ஒவ்வொரு சமயம் நான் முதிய தம்பதிகளைக் கோயிலுக்கோ புராணப் பிரசங்கத்திற்கோ அழைத்துப் போவேன். இதுதான் நான் செய்யக்கூடியது. இப்படி ஒரு உதவியாக இருப்பதிலும் திருப்திதான் எனக்கு. ஆனால் அந்த வீட்டில் நான் குடியிருக்கும் மூன்றாம் மனிதன் தானே? இவ்வளவு அக்கறையும் தலையிடலும் தகுமோ எனக்கு?

இந்தக் கவலைத்தானா எனக்கு? இன்னொரு விதமாகவும் கவன்றேன். நானும் ஒருநாள் இந்த முதியவரைபோல் மாறவேண்டியவன் தானே? மக்களின் ஆதரவிலே வாழவேண்டியவன் தானே? இன்று இவர்களை விமர்சனம் செய்யும் நான், அப்பொழுது எப்படி இருப்பேனோ? ஆனால் இந்தச் சின்னத் தம்பதிகளிடம் குற்றம் குறை இருக்கிறதா? காணோமே!

உத்தியோகத்தினின்று ஒய்வு பெற வேண்டியதை எண்ணி சிலர் கவலைப்படுவார் எனக் கேள்வியுற்றிருக்கிறேன். எதற்குக் கவலை என்று நினைத்த நான், இப்பொழுது தெரிந்துகொண்டேன் காரணத்தை. பிறகு, என் வயசும் கவலையும் முதிய தம்பதிகள்பாலே சரிய, என் மனமும் மனச்சாட்சியும் இளந்தம்பதிகளை நாடி நின்றன!

ஒரு நாள் என்னுடைய வற்புறுத்தலினாலே, விசுவமும் லலிதாவும் குழந்தைகளோடு தமிழ்ப்படம் ஒன்று பார்க்கப்போனார்கள்; எனக்குக் காரியாலய வேலை; என் அறையிலே எழுதிக்கொண்டிருந்தேன்.

பெரியவரும் அம்மாளும் சற்றுப் பொறுத்துப் பிள்ளை நாட்டுப்பெண்ணைப்பற்றிப் பேசுவதாக புலனாயிற்று . . . ஏனோ குறுகுறுப்பு. கவனிக்கவேண்டும் என்று.

"சரி, சொல்லிவிடுங்கோளேன்" என்றாள் அம்மாள்.

"எப்படி சொல்லலாம்னு பார்க்கிறேன்" என்றார் அருணாசலம்.

"நன்னாருக்கு! வயிற்றிலே பிறந்தவனிடம் சொல்லப் பயம், தயக்கமென்ன? 'பட்டு' ன்னு பேசிவிட வேண்டியதுதான்!"

"ஆகட்டும், சொல்கிறேன்; இன்னும் பதினைந்து நாள் இருக்கே."

"நாலு நாளிலே சொல்லிடுங்கோ சட்டுன்னு. நிச்சயமானதும் நான் இங்கே வாங்கவேண்டிய சில சாமான்களெல்லாம் வாங்கணும்."

"உம்!" என்றார் கிழவர். பிறகு அங்கே மோனம். "ஹோ, அறுபதாங் கல்யாணம்!" என்று இயற்கையாக எழுந்த ஒர் கிளர்ச்சிக்கு உட்பட்டு, எழுதுவதை நிறுத்தி, முதியவர்களை அணுகிக் கேட்டேன்.

"ஷஷ்டியப்த பூர்த்தி இல்லை ஸார்! அதை நடத்தி ஒரு வருஷமாச்சு. இப்போது இஷ்டபூர்த்தி" என்றார் அவர்.

நான் விழித்தேன். அவர் விளக்கம் கூறினார்.

அருணாசலம் இன்னும் உத்தியோகத்தை விட்டுவிடவில்லை. விட்டுவிட எண்ணமாம். அதுவும் எதனாலே? ரிடையர் ஆன கிழவர், உடல் தளராது, ஊக்கம் குன்றாது, வேலை செய்வதை பலர் பாராட்டினாலும், சிலர் 'பதவி மோகம், பணத்தாசை!' என்று கூறுவது செவியில் பட்டுவிட்டதனாலே. சம்பாதித்ததும், அநுபவித்ததும் போதும் என்று வேலையை விட்டுவிடத் தயார்தான் இவர். ஆனால் அவர்களே விலக்காதபொழுது விலகி, இங்கே பிள்ளை நாட்டுப்பெண்ணிடம் வந்திருப்பது அவ்வளவு சிறப்பா? அவசியமா? தனியிடத்திலே இருந்தாலும் கௌரவ ஹானி. அதற்காக யோசனை.

இந்த வருஷத்திற்கு வேலைக்குரிய விடுமுறை இருக்கிறது என்று இங்கே வந்திருக்கிறார்களாம், சூழ்நிலையை ஆராய. இங்கே திருப்தி ஏற்பட்டால் விடுமுறையின் இறுதியில் உத்தியோகப் பொறுப்பை கழற்றிவிடும் நோக்கத்துடன், குட்டாக வந்திருக்கிறார்கள். திருப்தி இல்லையேல் உத்தியோகம் தொடர நோக்கம்.

இப்பொழுது விடுமுறை முடியப்போகிறது. பிள்ளையிடம் தெரிவிக்க யோசனை. ஆனால் ஊருக்குப் போய்விடத்தான் தீர்மானம்.

"ஆமாம், ஸார், யாரோ சிலர் உங்களைப் பதவிமோகம் என்றதற்காக, நீங்கள் நாட்டுக்குத் தற்சமயம் தேவையாய் இருக்கும், அநுபவம் நிறைந்த சேவையைத் தர மறுக்கலாமா?" என்று கூறிவிட்டேன் நான். ஆம், நான்தான் கூறினேன்.

மறுநாள் விசுவம் அறிந்தான், பெற்றோர் செய்திருக்கும் ஏற்பாட்டினை. "என்னப்பா, இப்படி? லீவிலே வந்திருக்கிறதாகச் சொல்லவே இல்லையே!" என்றான். தன்னிடம் உண்மை உரக்காத அவர்களுடைய நம்பிக்கையின்மைக் கண்டுதான் போலும் அவன் குரல் உடைந்திருந்தது.

"லீவு கழிக்க வந்திருக்கிறோம் என்றால், நீங்கள் எங்களை ஆசார உபசாரம் செய்து, திணற அடித்துவிடுவீர்களே!" என்றாள் காமாக்ஷியம்மாள்.

"அதுதானே!" என்றார் அருணாசலம்.

இப்பொழுதும் இவர்கள் இருவருமே பேசிய தொனி கண்டு உள்ளம் மறுகினேன் நான்.

குழந்தைகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்கிறார்களே; இவர்களுக்கும் குழந்தைகளுக்கும் எங்கே ஒற்றுமை? குழந்தைகளுக்குப் பெற்றோரிடம் நம்பிக்கை செறிந்த அன்பு. அடித்தாலும் குற்றம் காணா. இளந்தம்பதிகளிடை வேற்றுமை ஒழியவே உதவி செய்வன குழந்தைகள். முக்கியமாக, குழந்தைகள் தங்களைப் பெரியவர்கள் என்று சொல்லிக்கொள்ளவே விரும்புவார்கள்.

என் மனம், அரவணைப்புக்கும் சுசுரூஷைக்கும் அடிகோலி, எதிர்ப்பார்த்துப் பேசும் அருணாசலம் தம்பதிகள் ஊருக்குப் போய்விடும் விஷயமாகச் சற்றும் கவலைப்படவில்லை.

அவர்களை ரெயிலேற்றிவிட நானும் குடும்பத்தாருடன் சென்றேன். விடைபெரும் படலத்தின்போது என் மனத்திலே சற்றுத் தளர்ச்சிதான். விசுவமும் லலிதாவும் கண்களில் நீர்துளும்ப தோன்றியபொழுது, நானும் கண்கலங்கிவிடுவேனோ என்று அச்சமுற்றேன். கலங்காதவர்களாக காட்சியளித்தவர்கள் அருணாசலம், காமாட்சியம்மாள், கீதா, அருண் ஆகிய நால்வரே!

"இந்த விஷயத்திலே மற்றும் ஒற்றுமை இருக்கிறது, இவர்களுக்கும் குழந்தைகளுக்கும்" என்று ஒப்புக்கொண்டேன். கலங்கி நிற்கும் விசுவத்திற்கு, வீடு மீளும் வழியிலே ஆறுதல் கூறப் பெரிய திட்டமிட்டேன்.

வண்டித் தொடர் நகர்ந்தது. விடை கொடுத்த முதிய தம்பதிகள் விலகி மறைந்தனர். இல்லம் நோக்கிப் புறப்பட்டோம். விசுவத்தைப் பார்த்தேன்.

"என்ன இருந்தாலும் அவர்கள் குழந்தை ஆகிவிடுவார்களா, விசுவம்? ஏன் குழந்தைகளைப் பிரிந்த மாதிரி கலக்கம் உனக்கு?" என்று தேற்றினேன் சுருக்கமாக.

"பார்க்கப்போனால் குழந்தைகள் மாதிரிதான். வெறுமனே இருக்கவே பிடிக்காது குழந்தைகளுக்கு. வேலை பார்க்க அப்பாவுக்குத் துருதுருப்பு. அம்மாவுக்குக் காரியம் செய்ய பரபரப்பு " என்றாள் லலிதா.

"ஆமாம். குழந்தைகள் மாதிரியேதான்; பிறர் கையை எதிர்பார்க்காமல், தங்கள் காரியத்தைத் தாங்களே பார்த்துக்கொள்ளவேணும் என்ற எண்ணம் ஜாஸ்தி!" என்றான் விசுவம், வெறித்து

நோக்கியவாறே; தன் கையைப் பிடித்துக்கொள்ளாமலேயே தன் பக்கம் நடந்துவரும் கீதாவைப் பார்க்காமலேயே.

"அதுதான் ஆதரவிலே இருக்கோம், போஷணையிலே இருக்கோம் என்று அடிக்கடி சொல்வார்!" என்று நான் ஒத்துப்பேசினேன். குழந்தைகளுக்கும் அவர்களுக்கும் ஒப்புமை கிடையாது என்று நான் ஆராய்ந்து முடிவு செய்திருப்பதை கூற இப்பொழுது என் நா எழவில்லை.

கள்ளமற்ற குழந்தை உள்ளம் படைத்த இவர்கள் இருவரும், பெரியவர்கள் இருவரையும்பற்றிப் பேசியதைக் கேட்டபின் என் ஆராய்ச்சியை எடுப்பதா?

'சுதந்திர உணர்ச்சியுள்ளவர்களான அவ்விருவரின் குழந்தைகளான உங்களுக்கு, குழந்தைகள் இருவருக்குப் பெற்றோராகிக் குடும்பப் பொறுப்பு உள்ளவர்களானாலும் குழந்தை உள்ளம் படைத்து கபடில்லாமல் விளங்கும் உங்களுக்கு, வேண்டாமோ சுதந்திரம்?" என்று ஆரவாரம் செய்தது என் மனம்.

இதை உணர்ந்துதானோ, அல்லது தொலைவிலே கேட்கும் ரயிலின் நெடுமூச்சைக் கேட்டுத்தானோ, லலிதா தன் கணவனை ஒரு முறை பளிவு துளும்ப, மறு முறை கனிவு வீச, நோக்கினாள். அனளுடைய கண்களைச் சந்தித்த அவனிடமிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது.

**********

(கலைமகள், மே 1950)